**செய்தி வெளியீடு எண்:1082** **நாள்:11.11.2021**

# வடகிழக்கு பருவமழையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம்

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணையின்படி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில், தற்போது தீவிரம் அடைந்துள்ள வடகிழக்கு பருவமழையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்களுடன் இன்று (11.11.2021) காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ்லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.சண்முகம், இயக்குநர் (பகிர்மானம்) திரு.மா.சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழையினால் பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் மண்டலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக பெருவாரியான பொதுமக்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படாவண்ணம் மின்சாரம் வழங்குவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில்:

"தமிழகம் முழுவதும் பருவமழையின் போது ஏற்படும் மின்தடையை உடனடியாக சரிசெய்து பொதுமக்களுக்கு மின் விநியோகத்தினை விரைந்து வழங்க வேண்டும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அதேபோல், பணியாளர்கள் தங்களின் பணியின்போது மிக எச்சரிக்கையுடன் பாதுகாப்புடன் செயல்பட வேண்டும். மின்விபத்தை தவிர்க்க பெருமழை பொழியும் இடங்களிலும், தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளிலும் மின்விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்து நிலைமை சீரடைந்தவுடன் முழுமையாக கள ஆய்வு செய்த பின்பும், பொது மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்த பின்பும்,

மின் விநியோகம் வழங்க வேண்டும். மருத்துவமனைகள், குடிநீர் விநியோகம், பொதுமக்களின் பயன்பாடுகள் அதிகம் உள்ள இடங்களுக்கு முன்னுரிமை அளித்து மின் விநியோகம் செய்ய வேண்டும். மின்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் சேதங்களை விரைந்து சரிசெய்ய தேவையான பணியாட்கள், மின்தளவாடப் பொருட்கள், இதர பாதுகாப்பு உபகரணங்கள், ஜேசிபி, கிரேன் உள்ளிட்ட கனரக இயந்திரங்கள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பொதுமக்கள் மின்சாதனங்களை எச்சரிக்கையுடன் கையாள்வதற்கும், அறுந்துகிடக்கும் மின்கம்பிகளை தொடக்கூடாது எனவும் தொடர்ந்து எச்சரிக்கை அறிவிப்பு செய்து. பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் " என அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக் கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களுடன் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் பேசுகையில்:

"வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தற்போது நம்மிடம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 1,32,000 மின்கம்பங்கள், 16,500 கி.மீ. மின்கம்பிகள், 7,000 மின்மாற்றிகள் மற்றும் 1,071 மின்மாற்றி கட்டமைப்புகள், வி.கிராஸ் ஆரம் 1,00,000, எர்த் பைப் 6,000, குறைந்த அழுத்த கிராஸ் ஆரம் 75,000, உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த இன்சுலேட்டர் 8,00,000, இழுவை கம்பி 48,000, பில்லர் பெட்டிகள் 1,270, உயரழுத்த புதைவடம் 65 கி.மீ., தாழ்வழுத்த புதைவடம் 1,000 கி.மீட்டர்கள் கையிருப்பில் உள்ளன.

தமிழகம் முழுவதும் சுமார் 4,000 பொறியாளர்கள் மற்றும் 36,000 மின் ஊழியர்கள் தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுகின்றனர்.

ஒவ்வொரு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திலும் செயற்பொறியாளர் தலைமையில் 24 நேரமும் மழைகாலத்தில் காண்காணிப்பில் ஈடுப்பட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் கவனித்து வருகின்றனர்.

துணை மின் நிலையங்களுக்கு வரும் மின்பாதையில் ஏற்படும் மின்தடையை சரிசெய்யவும், மின்பாதையை ஆய்வு செய்வதற்கும் சிறப்பு குழுக்கள் தொடர்ந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் பொதுமக்களுக்கு மின்தடை ஏற்படாவண்ணம் உள்ளது.

ஒரு செயற்பொறியாளர் தலைமையில் 20 பேர் கொண்ட குழு 24 நேரமும் பணியில் ஈடுபட சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை தொடர்ந்து தொடர்பு கொண்டு மழைகாலத்தில் காண்காணிப்பில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் கவனித்து வருகின்றனர். மக்கள் தொடர்பு பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

களப் பணியாளர்களைப் பொறுத்தவரை, அதிகமான மழை பொழியும் சென்னை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் 12,100 பணியாளர்கள் மறுகட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் உள்ளனர். (சென்னை மற்றும் புறநகர் – 4,000, திருவள்ளூர், காஞ்சிபுரம் – 1,350, கடலூர் – 1,800, நாகப்பட்டினம், மயிலாடுதுறை – 926, தஞ்சாவூர் – 1,568, திருவாரூர் – 435, செங்கல்பட்டு – 2,043). பருவமழைக்கு முன்னதாக தமிழகம் முழுவதும் மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் மின்விநியோகம் பெருமளவு பாதிக்கப்படாவண்ணம் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 1,757 பீடர்களில் 71 பீடர்கள் பாதுகாப்பு கருதி தற்காலிகமாக மின் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. 44.20 இலட்சம் மின் நுகர்வோர்களில் 61,700 (1.3 சதவீதம்) மின் நுகர்வோர்களுக்கு தற்சமயம் பாதுகாப்பு கருதி மின்விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பத்திரிக்கை நிருபர்களை கொண்ட வாட்ஸ் குழுமத்தில் பகுதிவாரியான நிருபர்களையும் இணைத்து அக்குழுவில் பெறப்படும் அனைத்து குறைகளையும் உடனடியாக நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கருதி மின்விநியோகம் நிறுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு விரைந்து மின்சாரம் வழங்கவும், மின்கட்டமைப்பில் ஏற்படும் சேதங்களை விரைந்து சரிசெய்யவும் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் உள்ளிட்ட சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் எவ்வித தடங்கலையும் எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளனர்.

இதற்கு முன்னதாக, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் வேளச்சேரி துணை மின் நிலையத்தில் உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து தக்க அறிவுரை வழங்கினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**